முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண். 7/2020

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 15–04–2024.
பெயர் = மீனாட்சி வா.சா.–1
வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனதுஇடத்தை சேர்த்து பத்திரம்போட்டுள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்கிறார் சாட்சி. எனது பெயரில் ஒரே ஒரு சொத்துத்தான் உள்ளது. தாவாசொத்தை எந்த வருடம் வாங்கினேன் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கிரையம் வாங்கினேன். தாவாச் சொத்து கிராம நத்த பகுதிக்குள் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–2 கிரைய ஆவணத்தில் 3 அடி அகலமுள்ள கிழமேல் நடைபாதைக்கும் தெற்கு என்று எல்கைமால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த நடைபாதை இல்லையென்கிறார் சாட்சி. வா.சா.ஆ –2ன் மூலமாக கிழமேல் 51 அடி, தென்வடல் 42 அடி அளவுள்ள சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தில் ஒரு காரை வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் கட்டியுள்ள காரை வீட்டின் கிழமேல் 33 அடி, தென்வடல் 25 1/2 அடி என்றால் அந்த அளவு எனக்குத் தெரியாது என்கிறார் சாட்சி.

(2) நான் வீடு கட்டியதுபோக மீதமுள்ள சொத்தை நான் காலியிடமாக அனுபவம் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து 1ம் வாதியின் முன்சுவான்தாரராருக்கு கிரையப்பத்திரப்படி பட்டா கொடுக்காமல் குறைவாகவே நத்தம் சர்வேயில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றும், அதைப்போல் 1ம் வாதிக்கு கிரைய பத்திரப்படி பட்டா மாறுதல் செய்யாமல் தற்சமயம் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பட்டா குறைவான விஸ்தீரணத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் சொல்லியுள்ள நிலையில், அதை ஆட்சேபித்து விளம்புகை பரிகாரம்தான் கோரமுடியும் என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பெயரில் ஒரு சொத்தும், கணவர் பெயரில் ஒரு சொத்தும்

உள்ளதாக சாட்சி சொல்கிறார். என் கணவர் சொத்து வாங்கிய விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

(3) தாவா 1வதுலக்க சொத்தில் தென்வடல் 6 அடி, கிழமேல் 51 அடியை நத்தம் சர்வேயின்போது தெருவாக வகைப்பாடு செய்ப்பபட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது என்கிறார் சாட்சி. அதேபோல் 2வது லக்க சொத்திலும் தெருவிற்காக நத்தம் சர்வேயின்போது தென்வடல் 6 அடி, கிழமேல் 32 அடி தெருவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது என்கிறார் சாட்சி. என் சொத்திற்குரிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா 1, 2 லக்க சொத்துக்களை கிரையம் பெற்ற நானும், எனது கணவரும் தெருவாக நத்தம் சர்வேயின்போது வகைப்பாடு செய்யப்பட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வேலி அமைத்துள்ளதால் அதை யாரும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(4) நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு எனது பெயரில் பட்டா பெறுவதற்கு இதுவரை மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா கேட்டு மனுகொடுக்காமல் தாவாச் சொத்தின் வழியாக பொதுமக்கள் நடந்து செல்லும் போது நான் இடையூறு செய்ததால் வேறு வழியின்றி இந்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வேயர் தாவாச் சொத்தை அளவீடு செய்யும்போது பிரதிவாதிகளுக்கு சாதகமாக நடந்து கொண்டார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவாச் சொத்து நத்தம் சர்வேயில் தெரு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான், ஆனால் தெரு என வகைப்பாடு செய்யப்பட்டது தவறு என்கிறார் சாட்சி. தாவாச் சொத்தை அளவீடு செய்து பார்த்தபோதுதான் தாவாச் சொத்து தெரு என நத்தம் சர்வேயில் வகைப்பாடு செய்யப்பட்டது எங்களுக்கு தெரியும் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

(5) வழக்கறிஞர்/ஆணையர் தனது அறிக்கையில், சர்வேயர் அளவீடுசெய்ய முற்பட்டபோது, வருவாய் ஆவணங்களில் உள்ள புலவரைபடத்தின்படி பூமியில் அளவுகள் இல்லையென்றும், தாவாச் சொத்துக்களை குறிப்பாக சர்வேயரால் அளவீடு செய்து காண்பிக்க முடியவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாவாச் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததால்தான் சர்வேயரால் அளவீடு செய்ய முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபண

வாக்குமூலத்திலும், பிராதிலும் பூஸ்திதி பாதை இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(6) 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டப்போவதாக எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் 1, 2 பிரதிவாதிகள் வீடு கட்டுவது பற்றி எனக்குத் தெரியாது என்கிறார் சாட்சி. நானும், எனது கணவரும் தாவா 1, 2 லக்க சொத்துக்களை கிரையம் வாங்கி கொண்டு, தெருவை ஆக்கிரமிப்பு செய்து பொதுமக்களின் பொது பயன்பாட்டிற்கு இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது அனுபவத்திற்கு பிரதிவாதிகள் இடையூறு எதுவும் செய்யவில்லை என்றும், நான்தான் பிரதிவாதிகளின் அனுபவத்திற்கும், பொதுமக்களின் அனுபவத்திற்கும் இடையூறு செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுமக்கள் தெருவை பயன்படுத்துவதை நான் அவர்களுக்கு இடையூறு செய்ததால் வேறு வழியின்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக உள்நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–</u>

எத்தனை அடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிழமேல் 51 அடி தென்வடல் 45 அடி என்கிறார் சாட்சி. நான் கிரையம் வாங்கிய சொத்திற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கும் சேர்த்துத்தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கிய முழுச் சொத்திற்கும் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் காலியிடமாக வாங்கி பின்பு அதில் வீடு கட்டினேன் என்றால் சரிதான். நான் காலியிடமாக கிரையம் வாங்கியபோது நடைபாதை இருந்ததா? என்றால் இல்லை என்கிறார் சாட்சி. எனது வீட்டிற்கு மேற்கே சிவனாண்டி வீடு உள்ளதா? என்றால் ஆமாம். சிவனாண்டி காலியிடமாக கிரையம் வாங்கி வீடு கட்டியுள்ளாரா? என்றால் காலியிடமாகத்தான் உள்ளது என்கிறார் சாட்சி. நான் சொல்லியுள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தானது பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய தெரு என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.